மாலை முரசு

பக்கங்கள் 20+2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 11 வியாழக்கிழமை 07.11.2024 | அதிர்வு 98

## இரத்தக் காயங்களுடன் ஆசிரியர் சடலமாக மீட்பு



(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த நற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகவும், 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பத்து பேருடன் பலமான அணியாக நாடாளுமன்றத்துக்குச் செல்வோம்

## தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ சூளுரை

பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் எமது அணி, எதிர்வரும் பத்தாம் நாடாளுமன்றத்தில் ஓர் அழுத்த அணியாக இடம்பெற வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

“தமிழ் முற்போக்குக் கூட்டணி, பதுளை, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா ஆகிய ஏழு மாவட்டங்களில் பத்து வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. இந்தப் பத்து வேட்பாளர்களும் வெல்ல வேண்டும்.

எம்மை நாமே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இந்த நாடு இன்று ஒரு வரலாற்று திருப்பு முனையில் நிற்கின்றது. இந்த வரலாற்றுச் சூழலில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாம் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். வரலாறு தந்திருக்கும் வாய்ப்பை நாம் தவற விடகூடாது. 05▶

# ராஜபக்ஷகளுக்கு மாற்றீடான இனவாதக் கூட்டமே ஜே.வி.பி.

## யாழில் ராஜிதவின் மகன் விளாசல்

(பிரபாகரன் டிலக்சன்)

ராஜபக்ஷகளுக்கு மாற்றீடாகவே மற்றுமொரு இனவாதக் கூட்டமான ஜே.வி.பியினர் “தேசிய மக்கள் சக்தி“ எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ளனர் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்துர சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் நேற்று புதன்



கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02▶

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!



சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை

# ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் மு.பொன்னம்பலம் காலமானார்!

ஈழத்தின் முதுபெரும் கவிஞரும் எழுத்தாளருமான மு. பொன்னம்பலம் (மு.பொ.) நேற்று புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

மறைந்த எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் சகோதரரான மு.பொ. 1939 இல் யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் பிறந்தார்.

இவர் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகள் எனப் பலவற்றை எழுதி, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர் ஆவார்.

1968இல் வெளியான "அது" கவிதைத் தொகுதியே இவரது முதல் நூலாகும்.



அகவெளிச் சமிக்ஞைகள், விடுதலையும் புதிய எல்லைகளும், பேரியல்பின் சிற்றொலிகள், யதார்த்தமும் ஆத்மார்த்தமும், கடலும் கரையும், நோயில் இருத்தல், திறனாய்வு சார்ந்த பார்வைகள், பொறியில் அகப்பட்ட தேசம், சூத்திரர் வருகை, விசாரம், திறனாய்வின் புதிய திசைகள், முடிந்து போன தசையாடல் பற்றிய கதை முதலான நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டார்.

எழுத்தாளர் மு. பொன்னம்பலத்தின் மறைவு ஈழத்து இலக்கியத்துறைக்குப் பேரிழப்பாகக் கருதப்படுகின்றது.

## மு.பொ.வின் மறைவுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இரங்கல்

ஈழத்தின் முதுபெரும் படைப்பாளுமை மு.பொ.வின் (மு.பொன்னம்பலம்) மறைவுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

"மு.பொ. என அழைக்கப்படும் மு.பொன்னம்பலம் தமது பன்னிரண்டாவது வயதில் கவிதைகள் எழுதத் தொடங்கியவர். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இலக்கிய விவாதங்கள் ஆகிய துறைகளில் ஈடுபட்டு ஆழ்தடங்களை அவர் பதிவு செய்தவர். எழுபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக இயங்கி வந்தவர்.

மு.பொ. கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினராவார். அவருக்கு அண்மையில் தமிழ் நிதி விருதை வழங்கி கொழும்புத் தமிழ்ச் சங்கம் கௌரவம் செய்தது.

மு.பொ. வின் இழப்பு ஈழத்து தமிழ் இலக்கிய உலகுக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று ஆகும். அன்னாருக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மு.பொ. வின் ஆத்ம சாந்திக்கு இறை அருள் வேண்டுகின்றோம்." - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

ராஜபக்ஷகளுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தெற்கில் சுமார் 76 வருட பாரம்பரியத்தைக் கொண்ட கட்சிகள் இன்று சுக்குநூறாகியுள்ளன. அந்த மாற்றம் வடக்கிலும் வர வேண்டும். அந்த மாற்றத்துக்காகவே இளையோர்களான சுலக்சன் தலைமையிலான குழுவினர் களமிறங்கியுள்ளனர். அவர்களுக்கு நாங்கள் கரம் கொடுக்கவே வந்துள்ளோம்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ காலத்திலும், கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் வடக்கில் அராஜகங்கள் நடைபெற்றன. பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டனர். ஊடகவியலாளர்கள் கூட காணாமல் ஆக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர்.

அவ்வாறு வடக்கிலே அராஜகங்கள் நடைபெற்றபோது தெற்கிலே நாங்கள் குரல் கொடுத்தோம். ஐக்கிய சுதந்திர முன்னணி தமிழ் மக்களுக்காக அன்று தொடக்கம் குரல் கொடுத்தே வருகின்றது.

இனவாதத்தை மூலதனமாகக் கொண்டே ராஜபக்ஷக்கள் ஆட்சி செய்தனர். அவர்களுக்குப் பல அரசியல்வாதிகள் ஆதரவாகச் செயற்பட்டனர். அப்போது நாங்கள் தமிழ் மக்களுக்காகவும் முழு நாட்டுக்காகவும் போராடி மஹிந்த கும்பலைத் துரத்தினோம்.

கடந்த 2015ஆம் ஆண்டு மஹிந்த கும்பலை விரட்டி நல்லதொரு ஆட்சியை அமைத்தோம். அந்தக் காலப் பகுதியிலே தமிழ் மக்கள் ஓரளவு சுதந்திரக் காற்றை சுவாசித்தர்கள். பின்னர் புலிகள் மீள் உருவாகின்றார்கள் எனவும், முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் கருத்துக்களை கூறி மீண்டும் இனவாதத்தைக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி வந்தது.

மீண்டும் நாங்கள் போராடினோம். ராஜபக்ஷ கும்பலுக்குச் சாவு மணி அடிப்பது போல் வெற்றி கொண்டோம். அதனால்தான் தற்போது ராஜபக்ஷக்கள் தேர்தல் அரசியலில் இருந்து விலகி இருக்கின்றனர்.

வடக்கில் துப்பாக்கி முனைகளுக்குள் இருந்தும் பலர் நல்லிணக்கத்துக்காகக் குரல் கொடுத்தார்கள். அவர்களுடன் இணைந்தே இனவாதப் பேய்களை எம்மால் விரட்ட முடிந்தது.

தெற்கில் உள்ள பெரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி சுக்குநூறாகி விட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் காணவில்லை. மொட்டுக் கட்சி உடைந்து விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து உடைந்து வந்த ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் காணாமல்போய்விடும். நாட்டை நாசமாக்கிய ஜே.வி.பியினரே தேசிய மக்கள் சக்தி எனவும், மாற்றம் எனவும் கூறி ஆட்சி அமைத்துள்ளார்கள்.

தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என 13ஆம் திருத்தத்தை ஆதரித்தவர்களைப் படுகொலை செய்தவர்களே ஜே.பி.வியினர். அவர்கள் தற்போது 13 ஐத் தாண்டியும் செல்வோம் எனத் தமிழ் மக்களுக்கு உறுதி அளிக்கின்றார்கள். ராஜபக்ஷக்களுக்கு மாற்றீடாகவே மற்றுமொரு இனவாதக் கூட்டமான ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்துள்ளனர். கடந்த காலங்களில் தோற்கடிக்கவே முடியாது என இருந்தவர்களைத் தற்போது துரத்தி அடித்துள்ளோம்.

தமிழ் மக்களுக்கான உரிமைக்காகத் தெற்கு மக்களையும் ஒன்றிணைத்து நாங்கள் போராடுவோம். கடந்த காலங்களில் துப்பாக்கி முனைகளுக்கு மத்தியிலும் போராடினோம். தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தமைக்காக எனது தந்தையாரான ராஜித சேனாரத்ன மீது குண்டு வீச்சுத் தாக்குதல் கூட நடத்தப்பட்டது.

எதற்கும் நாங்கள் அஞ்சப் போவதில்லை. வடக்குக்கு நாங்கள் இப்போது வரவில்லை. சமாதான கால பகுதியில் வந்தோம். யுத்தம் முடிந்ததற்குப் பின்னர், இடம்பெயர்ந்து இருந்த மக்களுக்குச் சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தோம். யாழ். தேர்தல் மாவட்டத்தில் எமது கட்சியான ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சுலக்சன், சக வேட்பாளரான விஜயகாந்த் உள்ளிட்டவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

அஹிம்சாவாதி காந்தியின் கண்ணாடிச் சின்னத்துக்குத் தமிழ் மக்கள் வாக்களித்து அவர்களை நாடாளுமன்ற அனுப்ப வேண்டும். வடக்கில் இருந்து அவர்கள் வரும்போது , தெற்கில் நாம் அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராகவே உள்ளோம்." - என்றார்.


எங்கள் சுயநிர்ணய உரிமைக்கான அரசியலையும் வளமான வாழ்க்கைக்கான பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்துவதற்கான எனது பயணத்திற்கு உங்கள் ஆதரவை நாடுகிறேன்.
4
X
மாற்றத்திற்கான எங்கள் பயணத்தில்..
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
கிருஷ்ணவேணி
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
ඉලංකෙයි තමිල් අරසු කට්චි
Ilankai Tamil Arasu Kadchi
4

# நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற அநுர முயற்சி!

## தமிழரசின் யாழ். மாவட்ட வேட்பாளர் பிரகாஷ் குற்றச்சாட்டு

"ஊழலை ஒழிப்போம், ஊழல்வாதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம், எமது ஆட்சியில் ஊழல்வாதிகளுக்கு இடமில்லை என்று வீர முழக்கம் செய்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற எண்ணுகின்றார். அதற்குத் தமிழ் மக்கள் பலிக்கடாவாகக் கூடாது. தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துவிட்டு, பின் குத்துது, குடையுதென்று கூறுவதில் பயனில்லை."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளரும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமாகிய தியாகராஜா பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். சங்குவேலி, மானிப்பாயில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அநுர அரசின் உண்மை முகம், அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு மாதங்களுக்குள்ளேயே தெள்ளத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜயவீரவின் மகனே, தேசிய மக்கள் சக்திக்கு ஒருபோதும் மூன்றில் இரண்டு வீதப் பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கிடைக்கக்கூடாது, கிடைத்தால் நாடு தாங்காது என்று எச்சரித்திருக்கின்றார்.

நாங்கள் தமிழர்கள். எமது பிரச்சினை தொடர்பில் சிந்திப்போம். எமக்கு ஊழலை ஒழிப்பது, நேர்மையான ஆட்சி போன்ற விடயங்கள் இரண்டாம் பட்சமே. அது சிங்கள மக்களுக்குத் தேவையான ஒன்று.

தமிழர்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற நிலை முதலில் மாற வேண்டும். எமது இனத்தின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றுக்காக ஆயிரமாயிரம் இளைஞர்கள் இந்த மண்ணில் காவுகொள்ளப்பட்டார்கள். அவர்கள் எதற்காக ஆயுதம் தூக்கிப் போராடினார்கள்? ஊழலற்ற ஆட்சி வேண்டும் என்றா? இல்லை. இங்கு அரசியல் ஞானம் அறவே அற்ற சிலர், தென்னிலங்கை மாயைக்குள் அகப்பட்டு, மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் என்று மக்களைத் தவறான வழியில் திசைதிருப்புகின்றார்கள்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்போது அமைச்சர் விஜித ஹேரத், சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். சிங்களவர் விரும்புகின்ற ஒரு நாட்டுக்குள்ளே உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான – ஆகக் குறைந்த



பட்சத் தீர்வான சமஷ்டியைக் கூட பேச்சுக்கே இடமில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கின்ற இந்த அரசை நம்பித் தமிழ் மக்கள் எவ்வாறு பின்செல்வது? தமிழ் மக்களுக்கு அவ்வாறு பகிரங்கமாகவே அறிவித்துவிட்டு, இங்குள்ள சிலரைப் பிடித்து எமது மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளார்கள். அவர்களும் தமிழர்கள் அமைச்சராகலாம் என்ற பசப்புவார்த்தை கூறி எமது மக்களை ஏமாற்றி தமது பதவிகளுக்காக வாக்குக் கேட்கின்றார்கள்.

ராஜபக்ஷக்கள் கம்பனி செய்ததைத்தான் இவர்கள் செய்கின்றார்கள். உள்ளடக்கம் ஒன்றுதான். உருவம்தான் வேறு. ராஜபக்ஷக்கள் அமைச்சில் டக்ளஸுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கினார்கள். மஹிந்த ஆட்சிக் காலத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அமைச்சராகவும், கோட்டா காலத்தில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சராகவும் டக்ளஸ் இருந்தார். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலும் அமைச்சராக அவர் கடமையாற்றியுள்ளார்.

சரி, பிழைகளுக்கு அப்பால், டக்ளஸ் எமது இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஒரு போராளி. அவர் தேர்தல்களில் தனது தமிழ்க் கட்சியிலேயே போட்டியிட்டார். ஆனால், இவர்கள் அவ்வாறானவர்கள் அல்லர். சிங்களக் கட்சிக்கு வாக்குப் பெற்றுக்கொடுப்பதற்காகப் போட்டியிடுகின்றனர். அந்த அணியில் ஒரு வைத்தியரும் கூட கேட்கின்றார். அவர் எமது மக்களை முட்டாள்கள் என்று எண்ணி தனக்கு சுகார அமைச்சுக் கிடைக்கும் என்று கூறித்தான் மனப்பால் குடித்து, எமது மக்களையும் முட்டாள்கள் ஆக்குகின்றார்.

அமைச்சுப் பதவிக்காகவா எமது இனம் செங்குருதியில் தோய்ந்தது. இவர்களுடன் ஒப்பிடும்போது டக்ளஸ் மேலானவர். அவர் தனது கட்சியில் – பின்னர் தடம்மாறிச் சென்றிருந்தாலும் இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி எமது மக்களுக்காகப் போராடிய ஒரு கட்சியில் தேர்தலில் நின்றார். அமைச்சுப் பதவியைப் பேரம் பேசி பெற்றார். அவர் முன்பு ஒரு விடயத்தை அடிக்கடி கூறுவார். நாடாளுமன்றத்தில் அரச தீர்மாணங்களுக்கு ஆதரவாகக் கை உயர்த்தினால்தான், நாம் ஆளும் தரப்பிடம் கைநீட்டி அபிவிருத்திகளைப் பெறலாம் என்றார். ஆனால், இங்கு எதுவும் பேசாமல் ஆளும் கட்சியில் இருக்கின்றோம் என்ற ஒரு காரணத்துக்காக கை உயர்த்தவிருக்கின்றவர்களை – சிங்களக் கட்சிக்கு – நீங்கள் வாக்களிப்பீர்களாயின் அது டக்ளஸுக்கு வாக்களிப்பதிலும் விட இழிநிலையானது.

அடுத்து பனை அபிவிருத்திச் சபை தலைவர் விடயத்தைப் பாருங்கள். ஆட்சிக்கு வந்தவுடன் செல்வின் என்ற நேர்மையானவரை நியமித்தார்கள். பின் திடுதிப்பென அவரை மாற்றி ஊழல் பேர்வழி என்று சமூகத்தால் அறியப்பட்ட விநாயகமூர்த்தி சகாதேவன் என்பவரை நியமித்திருக்கின்றார்கள். இன்று யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்காகக் கைதடியில் வீதியில் இறங்கியுள்ளார்கள்.

அரசின் இந்தச் செயற்பாடு வடக்குக்கு ஊழல் ஒழிப்பும் இல்லை என்பதையே காட்டுகின்றது. மாற்றம் தெற்குக்குத்தான். வடக்குக்கு இல்லை என்பது இதிலிருந்து புலனாகின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் போலிகளைக் கண்டு ஏமாறக்கூடாது. தென்னிலங்கை மக்கள் கோட்டாவை விரட்டியடித்தபோது, அவரைக் கொண்டு வந்ததில் எமக்குப் பங்கில்லாதமையால் நாம் வேடிக்கை பார்த்தோம். அநுர அரசுக்கு நாம் வாக்களித்துப் பங்காளியாகினோம் என்றால் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாக வடக்கு தமிழர்களின் வீடுகளை எரிக்கும் நிலையும் ஒரு காலத்தில் ஏற்படலாம்.

நாம் வழமை போன்று வேடிக்கை பார்க்க வேண்டும் என்றால் நாம் சரியாக எமது இனம் சார்ந்து செயற்படுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்தால் நாம் சரியாகத்தான் தெரிவு செய்தோம் என்று இரத்தக் கொதிப்பு ஏற்படாமல் புத்திசாதுர்யமாக நடந்தார்கள் தமிழர்கள் என்ற கர்வத்துடன் வேடிக்கை பார்க்கலாம். நான் இதை ஏன் தெரிவிக்கின்றேன் என்றால், அநுரகுமார அரசு தமக்குத் தொழிற்சங்கங்களைப் பாவித்துவிட்டு, தற்போது அனைத்தையும் கலைப்பதாக முடிவு செய்துள்ளது. அவர்கள் ஏதோ தவறிழைக்க உள்ளார்கள் என்பது இதிலிருந்து புலனாகின்றது." – என்றார்.



# இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மண்மேடு சரிந்து வீழ்ந்து உயிரிழப்பு!

லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹத்தொட்ட அமுன பகுதியில் உள்ள சுரங்கமொன்றில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஹத்தொட்ட அமுன பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் உட்பட மேலும் நால்வர் தனியார் காணியொன்றில் இரத்தினக்கல் அகழ்வு மேற்கொண்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் லக்கல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை லக்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# நாவற்குழியில் ரயில் மோதி அரச உத்தியோகத்தர் காயம்

**(த.சுபேசன்)**

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை ரயில் மோதி அரச உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவற்குழி ரயில் நிலையத்தை அண்மித்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றைக் கடக்க முற்பட்ட போதே ரயில் மோதி அவர் படுகாயமடைந்துள்ளார்.

உள்ளூராட்சி சபையொன்றில் பணிபுரியும் 52வயதான நபரே காலையில் பணிக்குச் செல்லும்போது விபத்துக்குள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரத்தக் காயங்களுடன்...

முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட நூ/ஹ லெப்பை மொகமட் முபீஸ் (வயது 28) என்ற இளம் குடும்பஸ்தர் நேற்றுப் புதன்கிழமை மாலை பாடசாலையில் அவர் தங்கியிருந்த அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரணம் மர்மமான முறையில் நிகழ்ந்துள்ளது என்று அறிய முடிகின்றது.

நேற்றுப் புதன்கிழமை காலை பாடசாலை வரவுப் பதிவு இயந்திரத்தில் வருகையைப் பதிவு செய்த பின்னர் இவர் வகுப்பறைகளுக்குச் சென்று காலை 10.30 மணி வரை பாடம் நடத்தியுள்ளார்.

அப்போது அவர் தனது இடமாற்றம் தொடர்பாகக் கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்திக்கத் திருகோணமலை நகருக்குச் செல்லவுள்ளதாக மாணவர்களுக்குக் கூறியுள்ளார்.

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல் பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலை 3.30 மணிவரை வெளியேறுவதற்கான பதிவை இயந்திரத்தில் இவர் பதிவு செய்யவில்லை.

இதேவேளை, இவரது மனைவி தமது கணவருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதும் பதில் இல்லை. எனவே எங்கே எனது கணவர் உள்ளார் என்று பாடசாலை அதிபருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் வினவியுள்ளார். இதையடுத்து அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மேற்படி ஆசிரியர் தங்கியிருந்த அறைக்குச் சென்று பார்வையிட்டபோது அவர் உயிரற்ற நிலையிலும், உள்ளாடை மற்றும் காற்சட்டை என்பன அவிழ்ந்த நிலையிலும், கால்களில் இரத்தக் காயங்களுடனும் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் புல்மோட்டை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்று இரவு சம்பவ இடத்துக்கு வருகை தந்த நீதிவானின் உத்தரவுக்கு இணங்க சடலம் சட்ட வைத்திய மரண பரிசோதனைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

---

## பத்து பேருடன்...

ஏதோ வானத்தில் இருந்து இறங்கி வந்த கௌதம புத்தனைப் போல் பேசுகின்ற நபர்களை நான் என் அரசியல் வாழ்வில் பலமுறை பார்த்து இருக்கிறேன். இப்போதும் பார்க்கிறேன். இந்த பசப்பு வார்த்தைகளில் நமது மக்கள் ஏமாந்து விட கூடாது. உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள் தான் முதல் காரணம். ஆகவே, இவர்கள் எப்படி எம்மைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியும்? எம்மை நாம்தான் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

ஆகவே ஏழு மாவட்டங்களில் போட்டியிடும் எமது பத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்று, எதிர்வரும் பத்தாம் நாடாளுமன்றத்தில் நாம் ஒரு அழுத்த அணியாக இடம் பெற வேண்டும். இதை மனதில்கொண்டு நமது மக்கள் வாக்களிக்க வேண்டும்.

இந்த நாடு இன்று ஒரு வரலாற்றுத் திருப்பு முனையில் நிற்கின்றது. நாடு எழுச்சியும் பெறலாம். வீழ்ச்சியும் அடையலாம். இவற்றைப் பெரும்பாலும் பெரும்பான்மை மக்கள் தெரிவு செய்யும் பெரும்பான்மை கட்சிகளே தீர்மானிக்கப் போகின்றன.

இந்தச் சூழலில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாம் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். எம் தேவைகள் பற்றி, எம் இருப்பு பற்றி, எம் அபிலாஷைகள் பற்றி, நாம்தான் பேச வேண்டும். குரல் கொடுக்க வேண்டும். இன்று தேனொழுகப் பேசும் வேறு எவரும் எம்மைப் பற்றி பேச மாட்டார்கள். உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள்தான் முதல் காரணம்.

ஆகவே, பதுளை, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா ஆகிய ஏழு மாவட்டங்களில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பத்து வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யும் முகமாக வாக்களிக்கும்படி மக்களை வேண்டுகின்றேன்." – என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# '13' எனும் அபத்தம்

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை குறித்துக் கையாளுபவர்கள், கடந்த 35 வருடங்களாகத் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தையும் சுட்டிப் பேச வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் தன்னுடைய இராணுவப் படைகளோடு தலையீடு செய்த இந்தியாவும் தொடர்ந்து 35 வருடங்களுக்கு மேல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றியும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றியும் முன்னிலைப்படுத்தி தொடர்ந்து பேசியும் வலியுறுத்தியும் வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை பற்றி இந்தியத் தரப்பிலிருந்து எந்தக் கருத்து, எந்த சமயத்தில், எந்தத் தளத்தில் இருந்து வந்தாலும் அதில் 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கலை இந்தியா வலியுறுத்தி நிற்பது வழமை.

அந்த 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா, நடைமுறைப்படுத்துவதா என்பவை தொடர்பில் இலங்கை தீவில் தமிழர் தரப்பிலும், சிறுபான்மையினரான தமிழர் மீது மேலாதிக்கம் செலுத்துகின்ற சிங்களவர்கள் தரப்பிலும், வித்தியாசமான காரணங்களின் அடிப்படையில் கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது. இது யதார்த்த நிலைமை.

இந்தச் சமயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸினதும் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்விடயத்தில் எடுத்துள்ள நிலைப்பாடு பல தரப்புகளினாலும் ஊன்றிக் கவனிக்கப்படுகிறது. அதுவே சர்ச்சைக்குரிய விடயமாகவும் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும், 13 ஆவது திருத்தத்தையும் வலியுறுத்தி நிற்கின்ற இந்தியா உட்பட்ட தரப்புகளிடமும், தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளிடமும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்புகின்ற ஒரு கேள்வி நெருடலாக இருந்தாலும், அதற்கு இத்தரப்புகள் எதுவும் இது வரையில் நியாயமான - ஏற்றுக் கொள்ளத்தக்க - ஒரு பதிலை வழங்கவில்லை என்பதுதான் உண்மை.


இந்த விவகாரத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்போது புதிதாக எழுப்பும் கேள்வி அல்ல அது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்திலேயே அப்போது தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியாவோடும் கொழும்போடும் பேச்சுக்களை நடத்தி வந்த மிதவாத தலைவர்களான அமிரலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் இந்தியாவிடமும் கொழும்பிடமும் முன்வைத்த கேள்விதான் அது.

இந்தியா, இலங்கை, இலங்கைத் தமிழர்கள் ஆகிய தரப்புகளினது தலைவர்கள் மூடி மறைத்துத் தாண்டி நகர விரும்பும் அந்த விடயத்தை, கஜேந்திரகுமார் வெளிப்படையாகச் சுட்டி - அப்பட்டமாகக் கேள்வி எழுப்புகிறார். அதில் நியாயம் இருப்பது மறுக்கப்பட முடியாததாகும்.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை - இந்திய உடன்படிக்கை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே பதிமூன்றாவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதாகவும் வியாக்கியானப்படுத்தப்படுகிறது.

ஆனால், இலங்கை - இந்திய உடன்படிக்கையும், 13 ஆவது திருத்தச் சட்டமும் முற்றிலும் வேறு வேறானவை என்று இப்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், முன்னர் அமிரலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றோரும் சுட்டிக்காட்டிய விடயத்திற்கு இந்திய தரப்பிடமிருந்தும் கொழும்பிடமிருந்தும் எந்த பதிலும் - நியாயமான விளக்கமும் - இந்த 35 ஆண்டு காலத்தில் முன்வைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

தீர்வுக்கு வழி தேடி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படைகளை நிராகரித்த 13 ஆவது திருத்தத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் மீது அதனைத் திணிக்க முயல்வது கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டுவது போல பெரும் அபத்தமான விடயம்தான்..


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# தமிழ் மக்களின் தீர்வுக்காக விருந்தை தவிர்த்தவர் டக்ளஸ்!

## ஈ.பி.டி.பி. தேசிய பட்டியல் உறுப்பினர் பாபு சர்மா

தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை களியாட்டங்களில் விருந்து பசாரங்களில் கலந்து கொள்ள போவதில்லை என்பதில் உறுதியாக இருப்பவர் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பாபு சர்மா இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் சீனாவுக்கு அமைச்சர்கள் குழு ஒன்று மாநாடு ஒன்றுக்காகச் சென்றிருந்தனர்.

குறித்த மாநாடு நிறைவுற்றதன் பின்னர் சகோதர இன அமைச்சர் ஒருவர் டக்ளஸ் தேவானந்தாவை விருந்து உபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டிக் கொண்டார்.

விருந்து உபசாரம் எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா, சக அமைச்சரிடம், தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும்வரை நான் எந்த ஒரு விருது உபசாரத்திலும் மனமகிழ்ச்சியுடன் கலந்து கொள்ள மாட்டேன் என்று மறுப்பு தெரிவித்து இருந்தார்.

சக அமைச்சர், அப்படியானால் நீங்கள் வாழ்நாளில் எந்த ஒரு விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ள மாட்டீர்கள் என நகைச்சுவையாக அப்போது தெரிவித்து இருந்தார்.

அதனை புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா அந்த விருந்து உபசாரத்தை தவிர்த்துக்




கொண்டார்.

அவருடைய மனதில் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை களியாட்டங்களில் விருந்து பசாரங்களில் கலந்து கொள்ள போவதில்லை என்பது உறுதியாக இருந்தமை நிச்சயம்.

தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமை கிடைக்கும் வரை அவருடைய அரசியல் போராட்டம் தொடரும்.- என்றார்.

# மன்னார் ஓலைத்தொடுவாய் விவகாரம்; பொலிஸார் வழக்கை மீளப்பெற்றனர்!






**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனி யார் காணி உட்பட அரச காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடைமுறைப்படுத்தும் கனிய மணல் அகழ்வுக்கு கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் மற்றும் பொது அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில் மன்னார் பொலிஸாரால் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (06) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு பொலிஸாரால் கை வாங்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியுடன், மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர், உள்ளடங்களாக சுமார் 20 அரச திணைக்கள அதிகாரிகள், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் வகையில், நேற்று புதன் கிழமை (06) காலை அந்தப் பிரதேசத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது அந்தப் பகுதிக்கு வருகை தந்த மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிவில் அமைப்புகள் கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக்கொள்ளத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், மன்னார் பொலிஸார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சட்டத்தரணி எஸ். டினேசன், பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் உள்ளடங்கலாக சிலருக்கு எதிராக 'டீ' அறிக்கையைக் குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106 இன் கீழ் தாக்கல் செய்து தடை உத்தரவு கோரி இருந்தனர்.

குறித்த 106 ஆவது பிரிவின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்கவும், அந்தச் செயல்பாட்டுக்குத் தடை விதிக்க கூடாது என்பதன் அடிப்படையில் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விண்ணப்பம் செய்யப்பட்டது.

விண்ணப்பத்தின் போது திடீரென பொலிஸ் அதிகாரி ஒருவர் விண்ணப்பம் நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் வெளியில் சென்று மீண்டும் மன்றினுள் வந்து குறித்த விண்ணப்பத்தை தாங்கள் மீண்டும் கை வாங்குவதாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதன் அடிப்படையில் குறித்த வழக்கு கை வாங்கப்பட்டுள்ளது என சட்டத்தரணி எஸ்.டினேசன் மேலும் தெரிவித்தார்.




# வல்லையில் பனம் விதை நடுகை!



மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடமராட்சி வல்லை பகுதியில் பனம் விதை நடுகை செயற்றிட்டம் நேற்று முன்தினம் (06) புதன்கிழமை காலை வடமராட்சி ஊடக இல்லத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சமூக செயற்பாட்டு திட்டத்துக்கு அமைவாக மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு பனம் விதை நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பனம் விதை நடுகைத் திட்டத்தின் முதற்கட்டமாக, வடமராட்சி வல்லை பகுதியில் யாழ். பீச் ஹோட்டல் அருகாமையில் இருந்து தொண்டைமானாறு வீதி சந்திப்பு வரை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் இரு மருங்கிலும் இரண்டாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.





# பாடசாலைக்கு தேவையான சைக்கிள் தரிப்பிடத்தை அமைத்த மாணவர்கள்

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற 1998 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மற்றும் 2001 உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலைக்கு தேவையான பெண்கள் சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடத்தை அமைத்து கொடுத்துள்ளனர்.

மாணவர்களின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தரிப்பிடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை (08) இடம்பெறவுள்ளது.

கல்வி அபிவிருத்திக்காக இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் முன்வந்து இவ்வாறான சிறப்பான பணிகளை முன்னெடுத்துவரும் நிலையில் இவர்களின் செயற்பாடுகளுக்கு பலரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர். பிரதேச மக்களும், கல்விச்சமூகத்தினரும் நன்றியையும் தெரிவிக்கின்றனர்.

# மக்களை வாழ வைப்பவர்களுக்கு வாக்களியுங்கள் என்கிறார் அங்கஜன்

(த.சுபேசன்)

இதுவரை காலமும் அரசியல் வாதிகளை வாழவைக்க வாக்களித்தீர்கள். அந்த நிலைமை மாறி இந்த முறை யாவது மக்களை வாழ வைக்கக் கூடியவர்களுக்கு வாக்களியுங்கள்.

ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் எனக்கு அதிக விருப்பு வாக்கை வழங்கியிருந்தனர். அப்போதே நான்தான் அதிகூடிய நிதியை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குக் கொண்டு வர வேண்டும் என சபதம் எடுத்தேன்.அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளேன்.



எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர்.ஆனால் கிடைத்த பதவி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர்.அந்தப் பதவி மூலமாக 2020-2022 காலப் பகுதிக்குள் அதிக அபிவிருத்திகளைச் செய்திருந்தேன்.

மறுபடியும் இவ்வாறான அபிவிருத்திகளை இரட்டிப்பாகச் செய்ய மக்களுடைய ஆணை தேவை.

நான் மக்களிடம் கேட்பது இதுவரை அரசியல்வாதிகளை வாழ வைப்பதற்காக வாக்களித்தீர்கள். இம்முறையாவது உங்களை வாழவைக்கக் கூடியவர்களுக்கு வாக்களியுங்கள்.

நாடாளுமன்ற உறுப்பினராகவே மரணிக்க வேண்டும் எனப் பலர் ஆசைப்படுகின்றனர்.

இம்முறையும் அவ்வாறானவர்கள் போட்டியிடுகின்றனர். மக்கள் அவர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

இந்த முறையாவது உங்களை வாழ வைக்கக்கூடியவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யுங்கள்.– என்றார்.



# மக்களுக்கு சேவையாற்றவே இ.தொ.கா. காத்திருக்கின்றது!

## வேட்பாளர் மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருப்பதால்தான் மலையகத்தில் காணிகள் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. காங்கிரஸ் இல்லாவிட்டால் காணிகள் என்றோ பறிபோயிருக்கும். எனவே, மலையக மக்களின் இருப்புக்காக – பாதுகாப்புக்காக காங்கிரஸ் வேட்பாளர்களை நிச்சயம் வெற்றிபெற வைக்க வேண்டும்.

இவ்வாறு இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.



மஸ்கெலியா பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தவேளை, வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டு வழிநடத்தியவர்தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதனால்தான் ஜனாதிபதி தேர்தலின்போது அவரை ஆதரிக்குமாறு அறிவித்திருந்தோம்.அதுமட்டுமல்ல அவர் தலைமையிலான ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கு பல சேவைகளை பெற்றுக் கொடுக்க முடிந்தது.

காணி உரிமையை வழங்குவதற்கு உரிய நிதி ஒதுக்கப்பட்டது. சம்பள பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல அவர் தலைமையிலான ஆட்சியில் குறுகிய காலப் பகுதிக்குள் மலையகத்துக்கு பல சேவைகளை பெற்றுக்கொடுக்க முடிந்தது. காணி உரிமையை வழங்குவதற்கு உரிய நிதி ஒதுக்கப்பட்டது. சம்பள பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாட்டையும் பாதுகாத்து மலையகத்துக்குரிய அபிவிருத்திகளுக்கான உதவிகளையும் ரணில் விக்கிரமசிங்க வழங்கினார்.

எமது மக்கள் அவருக்கு வாக்களித்தனர். ஏனையோர் வாக்களிக்கவில்லை. அதனால் பெரும்பான்மையை பெற முடியாமல் போனது. தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் எமது மக்கள் ஏன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும்? இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தான் மக்களுக்காக குரல் கொடுக்கும், மக்களுக்காக சேவைகளை செய்துள்ளது. உரிமையுடன் வாக்கு கேட்பதற்குரிய தகுதி எமக்குதான் உள்ளது. காங்கிரஸ் இல்லாவிட்டால் மலையகத்தில் காணிகளெல்லாம் பறிபோய் இருக்கும். நாம் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களிடம் வரவில்லை. என்றும் மக்களுடன்தான் இருக்கின்றோம்.

ஆனால் தேர்தல் காலத்தில் மட்டும் தோட்டங்களுக்கு வருபவர்கள்தான் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என்று விமர்சித்துக்கொண்டுள்ளனர். தபால்மூல வாக்களிப்பில் எமது அரச ஊழியர்களில் 75 வீதமானோர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கே வாக்களித்துள்ளனர். ஏனெனில் எமது மக்களுக்கு அரச சேவையில் வேலைகளை பெற்றுக் கொடுத்ததும் காங்கிரஸ்தான். எனவே அறிமுகமில்லாதவர்களுக்கு வாக்களித்து வாக்குகளை சிதறடிக்காமல் சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். காங்கிரஸின் வெற்றிதான் மலையகத்துக்கான பாதுகாப்பு கவசமாக அமையும்.– என்றார்.




# சின்னமுத்து நோய் ஆபத்தானது; தடுப்பூசி பெறுமாறு அறிவுறுத்து!

## கல்முனை பிராந்திய வைத்திய அதிகாரி பஸால் தெரிவிப்பு

(றியாஸ் ஆதம்)

2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் இருந்து இல்லாமலாக் கப்பட்ட சின்னமுத்து நோய் 2023 ஆம் ஆண்டு மீண்டும் உயிர்பெற்று ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டி ருக்கிறது. சிறுபராயத்தில் சின்னமுத்துத் தடுப்பூசியைப் போடாதவர்கள் கண்டிப் பாக இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

சின்னமுத்து நோய் 9 மாதத்துக்கு உட்பட்ட குழந்தைகளையும் 20 தொடக்கம் 30 வயதுடையவர்களையும் பாதித்து வருகிறது. இது தற்பொழுது 20 தொடக்கம் 30 வயதினர் மத்தியில் தீவிரமாக பரவி வருகிறது. இதன் கார ணமாக குறித்த வயதினையுடையவர்க ளுக்குச் சின்னமுத்து தடுப்பூசி நவம்பர் 9 ஆம் திகதி தொடக்கம் நாடு முழுவதும் வழங்குவதற்கு உரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள வர்கள் தங்களது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் குறித்த தடுப்பூசி வழங்கும் மையங்களுக்குச் சென்று இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த ஜனவரி மாதம் 9 மாத குழந்தைகளுக்கு சின்ன முத்து தடுப்பூசி வழங்கப்பட்டது.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்க ளுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்படும். இரண்டு அல்லது மூன்று நாள்கள் சென்றதன் பின்னர், தடிமனு டன் மூக்கு சிந்துதல், கண் சிவந்து கண் வருத்தம் ஏற்படல், இருமல் போன் றன ஏற்படும். இவற்றுடன் நின்றுவிட்டால் கவலைப்படத் தேவையில்லை. இத னால் ஏற்படக்கூடிய பெரும் பாதிப்புக் களில் ஒன்று காதால் நீர் வடிதல்.

மூளை வீக்கம் ஏற்படுதல், அடிக்கடி வலிப்பு ஏற்படுதல், வயிற்றுப் போக்கு மற்றும் நிமோனியா காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆபத்தான நில மைகளும் ஏற்படும்.

இதனைவிட மிகவும் ஆபத்தானது அவர்களுடைய நோய் எதிர்ப்பு சக்தி குறையும். அதன் காரணமாகக் காய்ச் சல் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் வந்துகொண்டே இருக்கும். இப்படிப்பட்ட நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற் காக 20 தொடக்கம் 30 வயதை உடை வர்கள் சின்னமுத்து தடுப்பூசி போட் டுக்கொள்வது அவசியம்.- என்றார்.





# சரசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சரசாலை பொது நூலகத்தின் 2024ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ் வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றன.

மட்டுவில் கமலாசனி வித்தியால யத்தில், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கதிர்காமநாதன் சந்திர குமார் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

பரிசளிப்பு நிகழ்வில், பத்திரிகை வாசகர் கௌரவிப்பு, வீட்டு நூலக ஆர்வலர்கள் கௌரவிப்பு, ஓய்வுநிலை நூலகர்கள் கௌரவிப்பு, மாணவர்களுக் கான இலவச நூலக அங்கத்துவம் வழங்கல் என்பன இடம்பெற்றிருந்தன.

வீட்டு நூலகப் போட்டியில் முதலாம் இடத்தைப் கதிர்காமத்தையன் ரஜனி காந்தன், இரண்டாம் இடத்தை சசிகலா குகதாஸ், மூன்றாம் இடங்களை வசந்தா விக்கினேஸ்வரன், நா.தங்கவேல் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.



# அற்ப சலுகைகளுக்குச் சோரம்போய் சொந்தத் தலைமைகளை இழக்காதீர்!

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் தலைவர் ரிஷாட்!

மக்கள் மீது ஒருபோதும் இல்லாத அக்கறை மற்றும் கரிசனைகளை, சிலர் தேர்தல் காலங்களில் வெளிப்படுத்துவது ஏன்? எனக் கேள்வியெழுப்பிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், இவ்வாறு கரிசனை என்ற போர்வையில் சமூகத்தின் காலைவாரிவிட சதி நடப்பதாகவும் தெரிவித்தார்.

மன்னார், முசலி பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதுவானாலும் எமக்கான குரல், எமக்கான உரிமை என்று இருக்க வேண்டும். சமூகங்கள் ஆபத்தில் மாட்டிவிடும்போது, அவசரமாகக் குரல்கொடுப்பது நமக்கான தலைமைகளே. அபிவிருத்திகளிலும் அக்கறையுடன் செயற்படுவதற்கு நமக்கெனத் தலைமைகள் இருப்பது அவசியம்.

பாடசாலைகள் இல்லாமல், மாலை நேரங்களிலும் காலை நேரங்களிலும் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன. வைத்தியசாலைகள் இல்லாது மக்கள் கஷ்டப்பட்டனர். மீளக்குடியமர்வதற்கு காணிகள் இல்லாது மக்கள் தவித்தனர். இந்த நிலைமைகளைப் போக்கியது யார்? எமக்கான தலைமைகளே. முத்தலிப் பாவா, ஹுனைஸ் பாரூக், நூர்தீன் மசூர், எம்.எச்.எம்.அஷ்ரஃப் மற்றும் நானுட்பட சமூகத்துக்கு பல சேவைகள் செய்வதற்கு இதுவே காரணமாகியது.

இதனால், எமது பிள்ளைகள் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளர்களாக, உலமாக்களாக, சிறந்த வியாபாரிகளாக மற்றும் சமூகத்தில் நல்ல பல துறைகளில் மிளிர்கின்றனர். இந்த உயர்ச்சிக்கு காரணகர்த்தாக்களாக அமைந்தவை நமக்கான தலைமைகளே.

இன்று இவ்வாறான தலைமைகளை அழிப்பதற்கே திட்டம் தீட்டப்படுகிறது. இந்தச் சதிகள் பற்றி மக்கள் தெளிவுடன் செயற்பட வேண்டும். அற்ப, சொற்ப சலுகைகளுக்காக சோரம்போனால், நமது எதிர்காலத்தை நாமே தொலைத்தது போல ஆகிவிடும்.

இத்தேர்தலில், எந்த சலுகைகளுக்கும் நீங்கள் விலைபோகக் கூடாது. சொந்தக் காலில் நிற்பதற்காக, நமக்கான தலைமைகளை வென்றெடுக்க வாக்களிக்க வேண்டும்.- என்றார்.




# பான்ட் வாத்திய போட்டியில் கல்முனை ஸாஹிரா முதலிடம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான பான்ட் வாத்தியக்குழு போட்டிகளில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை அதிக புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் மாணவர்களைப் பயிற்றுவித்து நெறிப்படுத்திய சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீர் ஆகியோரை கல்லூரியின் அதிபர் எம்.ஐ.எம். ஜாபீர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.





# கந்தசஷ்டி சூரசங்காரம் இன்று!

அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவதைப் போன்று மன வளர்ச்சிக்கு சமயம் அடிகோலுகின்றது. இறைவன் ஒருவன், அவன் மக்களின் தந்தை என்றெல்லாம் போதிப்பதன் மூலம் அன்பு, சகோதரத்துவம் போன்ற ஜீவ ஊற்றுகளை அருளி மக்களின் வாழ்வு நலம் பெறச் சமயம் உதவுகின்றது. நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயவர்களை அடக்கவும் தர்மத்தை நிலை நாட்டவும் யுகந்தோறும் இறைவன் அவதாரம் செய்தருளுகின்றான்.எ

சஷ்டி விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து, ஆறாம், ஐந்தாம் நாள் சஷ்டி திதி வரையான ஆறு தினங்களும் நோற்கப்படும் முருகப்பெருமானுடைய சிறப்பான நோன்பாகும்.

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்தால் முருகனே குழந்தையாக அவதாரம் செய்வார் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை.

இதைத் தான் சஷ்டியில் இருந்தால் அகப்பை (கருப்பை) யில் வரும் என்ற பழமொழியாக கூறுவார்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி, வசிஷ்ட முனிவரிடம் இவ்விரதம் பற்றிக் கேட்டறிந்து கடைப்பிடித்து பெரும்பயன் அடைந்தாராம். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்ட பலரும் கடைப்பிடித்த விரதம் இது.

முருகன் கோயில் உள்ள எல்லா இடங்களிலும் கந்த சஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறு படை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச் சோலையிலும், இலங்கையில் நல்லூர், செலவச்சன்நிதி, கதிர்காமம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் மிகவும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி, மெய்ஞானமாகி மிளிர்கின்ற பரம்பொருளின் முக்திப் பேரருளை அடைவதற்காகச் சைவப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் தலையாயது கந்தசஷ்டி விரதம். முருகனுக்குரிய விரதங்கள் மூன்று. அவையாவன வெள்ளிக்கிழமை (வாரம்) விரதம், கார்த்திகை (நட்சத்திரம்) விரதம், கந்த சஷ்டி (திதி) விரதம் என்பனவாம். வல்வினை நீக்கி, வரும் வினை போக்கி, செல்வமும் செல்வாக்கும் தந்து அழகும், அறிவும் தந்திடும் வள்ளி மணாளனை, வடிவேலனை வழிபடும் விரதங்களில் மிகவும் சிறந்தது இந்தக் கந்தசஷ்டி விரதமாகும்.

கந்த சஷ்டியாகிய ஐப்பசி மாத சுக்கில பட்ச சஷ்டி முதல் அந்த ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் இவ்விரதம் கடைபிடிக்கப்பட வேண்டும். கந்த சஷ்டி தினத்துக்கு முன் வரும் பிரதமை முதல் ஆறு நாள்களும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரதத்தை இருப்பது ஒருமுறை.

அவ்வாறு இயலாதவர்கள் அந்நாள்களில் ஒருமுறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. எனவே உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலியவற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.



செல்வி வி. டெலக்சினி
அக்கரைப்பற்று.

விரத நாள்களில் அதிகாலையில் எழுந்திருந்து, நாள்கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேளைத் தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இரு ஆடைகளை அணிந்து, தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகவேளை வழிபட்டு இரவில் நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்துப் பூசிக்க வேண்டும்.

ஏழாம் நாள் காலை விதிப்படிப் பூசித்துக் கந்தன் அடியார்களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும் என்று கந்த புராணம் விதிக்கின்றது. கந்தவேள் சூரபத்மனை வெற்றி கொண்ட நாளே கந்த சஷ்டி. நமது உள்ளத்தில் ஆட்சி செய்து வாழும் காமம் முதலிய சூரபதுமனை முருகவேளின் ஞான வேலால் அழித்து, பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்தின் பொருளாகும்.

தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். இறைவனை உணர்ந்து அவனைச் சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பம் அடையலாம் என்பது சமயங்கள் காட்டும் பேருண்மை. இறைவனது திவ்ய அவதாரத்தையும் செயலையும் யாரொருவர் உள்ளபடி அறிகின்றார்களோ அவர்கள் மீண்டும் பிறவாமல் இறைவனையே அடைந்து விடுகிறார்கள் என்று கீதையில் கிருஷ்ணபகவான் கூறியுள்ளார்.

தெய்வ அவதாரங்களில் தீய சக்திகளை அடக்கி நல்லவர்களைக் காத்தார்கள் என்றால் இந்தச் செயல்கள் தீமைகளை நீக்கி நன்மைகளையே செய்து மக்கள் உய்ய வேண்டும் என்று போதிப்பதற்கே நிகழ்ந்தன என உணர்ந்து பக்தியுடன் வாழ்ந்து இகபர நலன்களை அடைய முயலவேண்டும். இத்தகைய அவதார இரகசியத்தை விளக்கி மக்கள் உய்வதற்கு உகந்த பெருவழிகளை விளக்கிக் காட்டுவதே ஆறுமுகப் பெருமானின் அவதாரம்.

வசிட்ட மாமுனிவர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குச் சஷ்டி விரத மகிமையையும் வரலாற்றையும் விதி முறைகளையும் உபதேசித்த பெருமையையுடையது. அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் பலரும் இந்த விரதம் அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றதோடு, இம்மை இன்பம், மறுமை இன்பம் ஆகியவற்றை பெற்றனர்.

**புராணக் கதை**

பிரம்மாவுக்குத் தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் தக்கன் சிவனை

தொடர்ச்சி ▼

# கந்தசஷ்டி சூரசங்காரம் இன்று!

தொடர்ச்சி▲

நோக்கித் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும் இறுதியில் சிவனால் தோற்று விக்கப் பெற்ற வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடம் இருந்து மேலான சக்தியைப் பெற்றான். ஒருநாள் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் (நவக்கிரகங்களுள் வெள்ளியாக கணிக்கப்படுபவர்) ஏவப்பட்ட மாயை என்னும் பெண் ணின் அழகில் மயங்கி தான் பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதனைத் தொடர்ந்து காசிபனும் மாயை என்னும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனிதத் தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடியதாரகனும், நான்காம் சாமத் தில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்து ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாக தோன்றிய இந்நால்வரும் ஆணவ மிகுதியால் அகங்கார மமகாரம் (செருக்கு) கொண்டு காணப்பட்டனர். இவர்களுள் சூரபதுமன் சிவனை நோக்கி கடுந் தவம் புரிந்து 108 யுகம் உயிர் வாழவும் 1008 அண்டம் அரசாளும் வரத்தையும், இந்திரஞாலம் எனும் தேரையும், சிவன் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் அழிக்க முடியாது எனும் வரத்தையும் பெற்றிருந்தான். இவ்வரத்தைப் பெற்ற சூரன் முதலானோர் தம்மைப் போல் பலரை உருவாக்கி அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிறையிலிட்டு சொல்லொணா துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தனர்.

அசுரர்களின் இக்கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். இறைவனும் அவர்கள்மேல் திருவுளம் கொண்டு அவர்களை அந்த துன்பத்தில் இருந்து காப்பாற்றும் நோக்குடன் தனது (6) நெற்றிக் கண்களையும் திறக்க (சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்கள் உண்டு. இவை தவிர ஞானிகளுக்கு மட்டுமே தெரியக் கூடிய "அதோமுகம்" (மனம்) என்ற ஆறாவது முகமும் உண்டு) அவைகளில் இருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் வாயுபகவான் ஏந்திச் சென்று வண்ண மீனினம் துள்ளி விளையாடும் தண்மலர் நிரம்பிய சரவணப்பொய்கையில் தாமரை மலர்களின் மீது சேர்க்கப்பெற்றன.

அந்த தீப்பொறிகள் ஆறும் உலகின் பொன்னெல் லாம் உருக்கி வார்த்ததென ஆறு குழந்தைகள் தோன்றின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் சீராட்டி பாலூட்டி வளர்த்துவரும் வேளை அகிலலோக நாயகி பார்வதி தன் மைந்தர்களை அன்புடன் கட்டியணைத்திட அவையாவும் ஒரு திருமேனியாக வடிவங்கொண்டு ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய ஒரு திரு முருகனாக தோன்றினன் உலகமுய்ய. ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய திருவுருவை பெற்றமையால் "ஆறுமுக சுவாமி" எனப் பெயர் பெற்றார்.

இந்த ஆறு திருமுகங்களும் ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரயம், வைராக்கியம், புகழ் என்னும் ஆறு குணங்களையும் குறிக்கின்றன. பிரணவ சொரூபியான முருகப் பெருமானிடம் காக்கும் கடவுளான முகுந்தன், அழிக்கும் கடவுளான ருத்ரன், படைக்கும் தெய்வமான கமலோற்பவன் ஆகிய மும்மூர்த்திகளும் அடக்கம். ஆறுமுகன் சிவாக்னியில் தோன்றியவன். அதனால் "ஆறு முகமே சிவம் சிவமே ஆறுமுகம்" எனப்படுகிறது.

முருகப்பெருமான் அசுரர்களான சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலையே நாம் கந்தசஷ்டி விழாவாகக் கொண்டாடுகிறோம். சூரபத் மனின் ஒரு பாதி 'நான்' என்கிற அகங்காரம் மற்றொரு பாதி "எனது" என்கிற மமகாரம்.

பன்னிரண்டு கைகளுடன் ஆறு திருமுகமும் கூடிய அழகின் அழகாய் தேவசேனாதிபதியாய், தேவரும் முனிவரும் வாழ்த்த சர்வ சக்தியாம் பார்வதி தந்த தனிப்பெரும் ஞான வேலை சக்தியாகக் கொண்டு சூரபன்மனைச் சம்ஹாரம் செய்யப் புறப்பட்டு சென்றார். அவர்களுடன் முருகப் பெருமான் மேற்கொண்ட போர் ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் பத்து நாள்கள் நடைபெற்றது. முதல் நான்கு நாள்களில் சூர பத்மனைச் சேர்ந்த வீரர்களை அழித்து அவனது பலத்தை துவம்சம் செய்தார்.

தாரகனையும் அவனுக்குத் துணை நின்ற கிரௌஞ் சத்தையும் பிளந்து, சிங்கமுகனை அழித்து பின் சூரனின் சேனை அழிந்த போதும் சூரபதுமனின் ஆணவம் அழிய இல்லை. அதனால் முருகன் தன் திருப்பெரு வடிவம் (விஸ்வரூபம்) காட்டி, எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டி, சிவனும் அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தியும், தன் தன்மை மாறாது மாயைகள் பல புரிந்து போர் செயலானான்.

கடைசியாக் நடுக்கடலடியில் மாமரமாய் நின்ற சூரபத்மனைத் முருகன் தன் வேலாயுதத்தால் இரு கூறாக்கினார். ஆணவம் அழியப் பெற்ற சூரன் தம் தவறை உணர்ந்து தன்னை மன்னித்து, ஏற்றுக்கொள் ளும்படி மன்றாடி வேண்டி நிற்க் ("ஈருடலும் ஓர்ருயுருமய் இருந்த சூரபதுமன்") அவை இரண்டையும் முருகன் தன் அருளால் சேவலாகவும் மயிலாகவும் மாற்றி, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியிலும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார்.

ஞானசக்தியான வேலின் தாக்கத்தால் ஆணவ மலம் வலியிழந்து ஆன்ம பரம்பொருளின் திருவடி அடைந்ததெனும் மறைபொருளை உணர்த்த அனுஷ்டிக்கப்படும் விரதமே கந்தர் சஷ்டி விரதம். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே ஸ்கந்தசஷ்டி என்ற நாமத்தோடு நாம் அனுஷ்டிக்கும் விரதமாகும்.

ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் இவ்விர தத்தை தம் உடல் நிலைக்குத் தக்கதாக கடைப்பிடிப்பர். சிலர் ஆறு நாள்களும் எவ்வித அன்ன ஆகாரமின்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் ஐந்து நாள்களும் ஒரு நேரம் உணவு உண்டு (பாலும் பழமும்) கடைசி நாளான ஆறாம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் ஏழாம் நாள் காலை முருகனை வழிபட்ட பின் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

### கந்த சஷ்டி விரதத்தில் படிக்க வேண்டியவை

இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சி யப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் படித்தால், என்னவென்று சொல்ல முடியாத மனஅமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

### விரத அனுஷ்டானங்களும் விதிமுறைகளும்

நாம் ஆறுமுகநாவலரின் "விரதம்" என்பதற்கான வரைவிலக்கணத்தை நோக்கின் "மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றாலும் இறை அன்போடு, கடவுளை விதிப்படி வழிபடல்"

தொடர்ச்சி▼

# கந்தசஷ்டி சூரசங்காரம் இன்று!

தொடர்ச்சி▲

என்கிறார். அவ்வாறான கட்டுப்பாடுகளினூடாக ஐம்புல னடக்கி மன அடக்கத்தை கந்த சஷ்டி விரதம் நமக்கு உணர்த்துகிறது.

இவ்விரதம் ஆறு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள் ளப்பட வேண்டும் (கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது). உபவாசம் அல்லது ஒரே நேர உணவு என்பது உணவு நியதி ஆறு வருடமும் அல்லது பன்னிரண்டு வருடங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல பபூர்வமாக ஆரம்பித்து கடைசி வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து (நிறுத்தி) பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

கந்த சஷ்டி என்னும் போது அதற்கென சில விரத நியதிகள் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன. இவ்விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் விரத நாள்களில் வைகறையில் துயில் எழுந்து சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களை முடித்து, ஆற்றில் இறங்கி நீரோட்டத்தின் எதிர்முகமாக நின்று, தண்ணீரில் ஷட்கோணம் வரைந்து, அதில் சடாக்ஷர மந்திரத்தை எழுத வேண்டும். 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தையும் நடுவில் எழுதி, முருகனை மனதில் இருத்தி நீரில் மூழ்கி எழ வேண்டும்.

கிணறு, குளம் போன்ற நீர்நிலைகளில் நீராடுபவர்கள் வடதிசை நோக்கி நின்று மேற்கூறியவாறு தூய நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து அமைதியான இடத்திலோ அல்லது ஆலயத்திலோ அமர்ந்து அல்லல் தீர்க்கும் ஆறுமுகப் பெருமானை நினைந்து தியானம் செய்ய வேண்டும். தியானத்துடன் நில்லாது மனம் பொறிவழிச் செல்லாது இறையருளை நாடி வேறு சிந்தனையின்றி களிப்புற வேண்டும். விரத காலங்களில் மனம் வேறு எண்ணங்களில் ஈடுபடாதிருக்க கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனு பூதி, கந்தர் கலிவெண்பா போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். முருகனாலயங்களில் இவ்விரத நாள்களில் கந்தபுராண படனம் நடைபெறும். இதை தவறாது கேட்டல் மிகவும் ஆன்மிக நன்மை பயக்கும்.

தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் (தீர்த்தம்) மட்டும் அருந்தியிருத்தல் உத்த மோத்தமமான விரதமாகும். பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர், முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம் ஆகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம், இவற்றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுவதற்கும், பசி, தாகம், இவற்றை ஓரளவு தணிக்க வும் இது உதவுகிறது.

கந்தசஷ்டி விரத நாள்களில், ஆன்மா மும்மலங் களையும் நீக்குவதற்குரிய பக்குவமான மனதுடன் நாம் இருக்க வேண்டும். உணவையும் உறக்கத்தையும் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதம். அதற்குரிய பலன் மும்மலம் நீங்கி ஆன்மா முக்தியைப் பெறுவதே ஆகும்.

இந்த ஆறு நாள்களும் பூரண உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகின்றது. மிளகுகளை விழுங்கி, பழம் மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து, இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப "கந்தசஷ்டி" விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கர்ப்பம் செய்து காப்புக் கட்டி உபவாசத்தைத் தொடங்க வேண்டும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்கும் முன் இன்ன நோக்கத்துக்காக இன்னமுறைப்படி இவ்வளவு காலம் அனுஷ்டிக்கப் போகின்றேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்ப்பபூர்வமாக அர்ச்சினை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லை வரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காகக்கைக் கொள்ளவேண்டும்.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். விரதத்துக்குரிய மூர்த்தியின் வடிவத்தைப் பொன் பிரதி மையாகச் செய்து வீட்டிலே வைத்து முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து சங்கல்ப பூர்வமாகப் புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பித்து சமஸ்தோபசார பூசைகளையும் செய்து முடித்து அன்று முழுவதும் உபவாசமாயிருத்தல் வேண்டும். மறுநாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்து மறுபடியும் அவற்றுக்குப் பூசைகள் நடத்திய பின் கும்பப் பொருள்கள் பொன் பிரதிமையும் மற்றும் தானப் பொருள்கள் யாவும் சேர்த்து வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, தாம்பூலதஷிணைகள் பூசைகளைச் செய்வித்த குருவுக்கு வழங்கி முறைப்படி நான் கைக்கொண்ட இந்த விரதத்தை இன்று உத்தியாபனம் செய்து முடிக்கின்றேன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட படி இவ்விரதத்துக்கு உரிய பலன்களைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் தம்பதிபூசை, சுமங்கலி பூசை முதலியன குறித்து விரதத்துக்கு சொல்லப்பட்டிருந்தால் அவற்றையும் செய்து முடிந்தபின் மாஹேஸ்வர பூசை செய்து வீட்டுப் பாரணை பண்ண வேண்டும். பாரணை காலை எட்டரை மணிக்கு முன்செய்து முடிக்க வேண்டும் என்பது விதி. சிலர் உதயத்துக்கு முன் விரதத்துக்கு உரிய பாரணையை முடித்துவிடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத்துக்கு முன் பாரணை செய்தல் விதியன்று.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காக சமைத்த உணவைச் சாமிப்படத்துக்கு முன்படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாரிப்பதிலும் தாமதம் ஏற்படின் சாமிபடத்துக்கு முன் ஒரு சிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து இட்டு அந்த நீரை உரிய காலத்தில் அருந்தி பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியான போது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும் , உபவாசமாக இருந்தால் முதலாவது விரத்தின் பாரணையைத் துளசி, தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுட்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் கந்தசஷ்டி விரதாரம்பம் அல்லது கந்தசஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு, இச் சந்தர்ப்பத்தில் முதலில் நாம் பார்த்தவாறு தான் விதிமுறையைக் கைக்கொள்ள வேண்டும்.

விரத நியமனங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று கடுமையான முறையில் ஆரம்பித்து பின்னர் அரைகுறையாக நிறுத்துவது கூடாது. விரதத்தை கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்பு தோன்றும் இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்.

ஆலயங்களில் ஆரம்பதினத்திலேயே தர்ப்பைய ணிந்து காப்புகட்டி, சங்கல்பித்து ஆறு நாளும்

தொடர்ச்சி▼

# கந்தசஷ்டி சூரசங்காரம் இன்று!

தொடர்ச்சி▲

நோன்பிருத்தல் முறை, இறுதி நாளில் கர்ப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தஷிணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பர்.

ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப் பூஜை என்று நடைபெறும் விசேஷ பூஜையையும் கண்டு வழிபட்டபின் மாஹேஸ்வர பூசை செய்து (அடியார்களுக்கு அன்னமிட்டு) பாரணை செய்ய வேண்டும்.

இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாள்களும் இரவு ஒரு பொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதி நாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் முடியாவதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒரு பொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பாலப்பழம் அல்லது பலகாரமும் உண்டு விரதமிருக்கலாம்.

ஆறாம் நாள் ஷஷ்டித்திதியில் சூரசம்ஹாரம் முடிந்த அன்றிரவு முழுவதும் விழித்திருந்து முருகன் பெருமைகளையே பேசியும், வழிபட்டிருக்கமாறு பழம் நூல்கள் விதிக்கின்றன. சிவபிரானுக்கு உரிய சிவராத்திரியும், மஹாவிஷ்ணுக்கு உரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக்கு உரிய ஸ்கந்தசஷ்டியும் மிகவிஷேஷமான தினமாதலால் துயில் நீத்தல் (விளித்திருத்தல்) பொருத்தமானதே. ஆயினும் அனைவராலும் இது கைக்கொள்ளப்படுவதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

விரதோயாபனத்தின் போது முருகன் ஆலயம் சென்று விரத பூர்த்தி சமயத்தில் விரதத்துக்குரிய பலன்கள் எனக்குச் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இந்த விசேச பூஜையை செய்கின்றேன் என்று சங்கல்பித்து விஷேஷ அபிஷேகம் பூஜை, ஷண் முகார்ச்சனை அல்லது சஹஸ்ர நாமார்ச்சனை முதலியவற்றைச் செய்வித்து காப்பு தர்ப்பை இவற்றுடன் தாம்பூலம் தஷிணை, வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி முதலிய தானங்களையும் சேர்த்து அர்ச்சகரிடம் சமர்ப்பித்து மகிழ்ச்சியுடன் இந்தத் தானத்தை வழங்குகின்றேன். சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது போல இந்த விரதபலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

விரதங்கள் மக்களின் மன வலிமை அதிகமாகவும், நம்பிக்கைகளின் அடிப்படையில், அவர்களது வாழ்வில் வளமும், நலமும், மிகுவதற்கு பயன்படுகின்றன. ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்புக்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழக்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

இங்கு குறிப்பிட்ட விதத்தில் வீட்டிலே பூசைகளைச் செய்வதும் பொன் பிரதிமைகளைச் செய்து தானம் கொடுப்பதும் யாவருக்கும் எளிதானதன்று இதனால் உத்தியாயனமே செய்யாது விடுவதும் முறையன்று எனவே உரிய காலத்தில் ஆலயம் சென்று விரத உத்தியாபனம் செய்யப் போகின்றேன் என்று குருமுகமாகச் சங்கல்பம் செய்து இயன்ற வகையில் விசேஷ அபிஷேகம் பூசை அர்ச்சனை வழிபாடுகளைச் செய்து குருவுக்கு தாம்பூல தட்சணைகளும், தானங்களும் இயன்றவரையும் வழங்கி விரதத்தை மனநிறைவோடு முடித்து இறைவனிடம் சமர்ப்பிக்கலாம்.

உடலின் சுமை குறைவதால் மிகக் கடுமையான நோய்களைக்கூட உண்ணா நோன்பின் மூலம் நீக்கிவிட முடியும். உண்ணா நோன்பின் போது, உடலில் நோயுற்ற திசுக்களே முதலில் கரைக்கப்படுகின்றன. கொழுத்த உடல் கொண்ட மனிதன், உண்ணா நோன்பின்போது மறைமுகமாக உண்டு கொண்டே இருக்கிறார். உள்ளுறுப்புக்களை வீணாகச் சுற்றியிருந்த பகுதிகள் கரைக்கப்படுகின்றன. உண்ணா நோன்பு மிகவும் எளிய, ஆனால் சிறப்பான ஊட்டச்செயலாக அமைந்து, உடலைக் காக்கிறது.

உண்ணா நோன்பின்போது, உடல் ஓய்வடைகிறது. எல்லா உறுப்புக்களுக்கும் அமைதி கிட்டுகிறது. நரம்புகள் தளர்ச்சி நீங்குகின்றன. வெப்பநிலை மாறி தண்மை ஏற்படுகிறது. கழிவுப்பொருள்களை உடலிலிருந்து வெளியேற்ற இயற்கை கொள்ளும் வழிகளில் உண்ணா நோன்பு மிகவும் சிறந்ததாக அமைந்திருக்கிறது. இரத்தமும் நிணநீரும் தூய்மையாக்கப்படுகின்றன. காம உணர்வு தணிகிறது. தூய நினைவுகள் வளர்கின்றன. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற ஆய்வுநிலை, நினைவு கூறும் சக்தி, இணைத்துக்காணும் அறிவு அதிகமாகின்றது. உண்ணா நோன்பினால் இளையவரும், முதியவரும் புதுப்பிக்கப்படுகிறார்கள். உடல் உறுப்புக்களில் மாத்திரம் அல்லாமல், உடலியல் செயல்களிலும் இது நிகழ்கிறது.

## கந்தசஷ்டி விரதத்தின் பலன்

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலைவாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தை கடைப்பிடிப்பது நன்று. "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பதாகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும். சுருக்கமாகச் சொன்னால் இவ் விரதத்தை கடைப்பிடித்து விரும்பிய பலனைப் பெறலாம்.

எந்த வினையானாலும், கந்தன் அருள் இருந்தால் வந்த வழி ஓடும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஆறுமுகனுக்கு உரிய விரதங்களுள் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவது, கந்தசஷ்டி விரதம்.







# தமிழகத்தில் பழனிசாமி விரைவில் சுற்றுப்பயணம்

அ.தி.மு.க. தொண்டர்களை உற்சாகப்படுத்த தமிழகம் முழுவதும் அனைத்து தொகுதிகளுக்கும் விரைவில் சுற்றுப்பயணம் செல்ல இருப்பதாக, மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிற மாநில செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், மாவட்டம் தோறும் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் அதிக அளவில் இளைஞர்களை கட்சிக்குள் சேர்ப்பது, அவர்களுக்கு பொறுப்புகள் வழங்குவது, தற்போது அ.தி.மு.க. மீதான மக்களின் மனநிலை உள்ளிட்டவை குறித்து மாவட்ட செயலாளர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"சட்டப்பேரவை தேர்தலுக்கு அனைவரும் தயாராக வேண்டும். வாக்குச்சாவடி குழுக்கள் இல்லாத இடங்களில் உடனடியாக அமைக்க வேண்டும். கட்சியை தேர்தலுக்கு தயார்படுத்த வேண்டும். தி.மு.க. ஆட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளையும், அ.தி.மு.க. அரசின் சாதனைகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும். 2026 தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியை பிடிக்க அனைத்து பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தொண்டர்களையும், நிர்வாகிகளையும் உற்சாகப்படுத்த தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக விரைவில் சுற்றுப் பயணம் தொடங்க இருக்கிறேன். தற்போது அரசியல் சூழல் மாறி வருகிறது. தேர்தல் நேரத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். தி.மு.க, பா.ஜ.க. தான் நமக்கு பிரதான எதிரிகள். அ.தி.மு.க. குறித்து தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் விமர்சிக்காத வரை, அவர்களை அ.தி.மு.க. நிர்வாகிகள் யாரும் விமர்சிக்க வேண்டாம். கடுமையான விமர்சனங்களை தவிர்க்க வேண்டும்." – என்று தெரிவித்துள்ளார்.

கூட்டத்தின் முடிவில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"முதல்வர் ஸ்டாலின், கருணாநிதியின் புகழ் பாடுவதையும் அதுபோல உதயநிதி, ஸ்டாலின் புகழ் பாடுவதையும் அன்றாட நிகழ்வுகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மக்கள் நலம் காப்பதில் கவனம் செலுத்துவதில்லை. தி.மு.க. அரசின் மக்கள் விரோத போக்கையும், ஜனநாயக விரோத போக்கையும் மக்களிடையே எடுத்துச் சென்று சட்டப்பேரவை தேர்தலை அ.தி.மு.க. சந்திக்கும். 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடையும்." – என்றார்.

# இந்தியாவில் 3 மாநிலங்களில் 16 இடங்களில் சி.பி.ஐ. சோதனை




சட்டவிரோதமாக சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததாக ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் அவரது அரசியல் உதவியாளர் மீது குற்றச்சாட்டு உள்ளது.

இதுதொடர்பான வழக்கில் சி.பி.ஐ. கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் 23 இல் வழக்கு பதிவு செய்தது.

இந்த நிலையில், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், பிஹார் ஆகிய மூன்று மாநிலங்களில் சி.பி.ஐ. திடீரென சோதனை நடவடிக்கைகளை தொடங்கியது. ஜார்க்கண்ட் மாநிலத்தில் சாகிப்கஞ் சில் உள்ள 11 இடங்கள், ராஞ்சியில் 3 இடங்கள், பாட்னா மற்றும் கொல்கத்தாவில் தலா ஒரு இடங்கள் என மொத்தம் 16 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

இதில், 50 லட்சம் ரொக்கம், ஒரு கிலோ தங்கம், ஒரு கிலோ வெள்ளி மற்றும் பல கோடி மதிப்புள்ள சொத்துகள் தொடர்பான ஆவணங்களை கைப்பற்றியுள்ளதாக சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# வரலாறு காணாத மக்கள் ஆதரவுடன் குடியரசு கட்சிக்கு அமோக வெற்றி

## அமெரிக்க ஜனாதிபதி ஆகிறார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் 2 ஆவது முறையாக அவர் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார். அவருக்கு பிரதமர் மோடி உள்ளிட்ட உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. ஜனநாயக கட்சியின் இப்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைய உள்ளது.

இதையடுத்து, நவம்பர் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதியும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் 'எலக்டோரல் காலேஜ்' எனப்படும் வாக்காளர் குழு நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த நாட்டில் மொத்தம் 50 மாகாணங்கள் உள்ளன. அந்தந்த மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்.

உதாரணமாக சிறிய மாகாணமான நெவாடாவில் 3, பெரிய மாகாணமான கலிபோர்னியாவில் 55 வாக்காளர் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இது போல நாடு முழுவதும் 538 வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் குறைந்தது 270 உறுப்பினர்களின் ஆதரவை பெறும் வேட்பாளர், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும்.

இந்நிலையில் திட்டமிட்டபடி, 50 மாகாணங்களிலும் நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வாக்குகளை எண்ணும் பணி உடனடியாக தொடங்கி இரவு முழுவதும் நடைபெற்றது. இதில் தொடக்கம் முதலே குடியரசு கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை வகித்தார்.

நேற்று இரவு நிலவரப்படி, ட்ரம்புக்கு 277 இடங்கள் கிடைத்தன. அதேநேரம் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட கமலா ஹாரிஸுக்கு 224 இடங்களே கிடைத்தன. மீதம் உள்ள பெரும்பாலான இடங்களிலும் ட்ரம்ப் முன்னிலை வகித்தார்.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய முழுமையான தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசோனா, ஜோர்ஜியா, மிச்சிகன், நெவாடா, நார்த் கரோலினா, பென்சில்வேனியா, விஸ்கான்சின் ஆகிய 7 மாகாணங்கள் வெற்றியை தீர்மானிப்பவையாக உள்ளன. அந்த வகையில், இந்த தேர்தலில் பென்சில்வேனியா, நார்த் கரோலினா, விஸ்கான்சின் மற்றும் ஜோர்ஜியா ஆகிய 4 இல் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். மற்ற 3 மாகாணங்களிலும் அவர் முன்னிலை வகித்தார். கடந்த தேர்தலில் 6 இல் ஜனநாயக கட்சியும் 1 இல் குடியரசு கட்சியும் வென்றது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பார்.

இந்த நிலையில், பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான், இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், ஜெர்மனி பிரதமர் ஒலாப் ஸ்கால்ஸ், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி உள்ளிட்டோரும் ட்ரம்புக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புளோரிடாவின் பாம் பீச்சில் உள்ள மாநாட்டு மையத்தில் திரண்டிருந்த தனது ஆதரவாளர்கள் மத்தியில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்க மக்களுக்கு இது மகத்தான வெற்றி. இந்த நேரத்தில் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். என் உயிர் உள்ளவரை உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்துக்காகவும் போராடுவேன். கடந்த 4 ஆண்டுகளாக நிலவிய பிரிவினையை பின்னுக்கு தள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. இது நாம் அனைவரும் ஒன்றிணைவதற்கான நேரம்.

இந்த தேர்தலில் வெற்றிக்காக பாடுபட்ட கட்சி நிர்வாகிகள், துணை ஜனாதிபதி வேட்பாளர் ஜே.டி.வேன்ஸ், என் மனைவி மெலனியா, என் பிள்ளைகள் அனைவருக்கும் நன்றி. குறிப்பாக, என் வெற்றிக்காக முழு ஆதரவை வழங்கிய டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்குக்கு நன்றி. அவர் ஒரு அறிவாளி. நாம் அவரை பாதுகாக்க வேண்டும். அது நம் பொறுப்பு. அவரைப் போலவே தேர்தலில் நமக்காக சிறந்த முறையில் பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டுகள்.

என்னை கொலை செய்ய முயற்சி நடைபெற்றது. ஆனால் ஏதோ ஒரு காரணத்துக்காக இறைவன் என் உயிரை காப்பாற்றினார் என பலர் என்னிடம் தெரிவித்தனர். நாட்டைக் காப்பாற்றவும் அமெரிக்காவை மகத்தான நிலைக்கு கொண்டு செல்லவும் தான் இறைவன் என் உயிரைக் காப்பாற்றினார். இப்போது நாம் இணைந்து அந்தப் பணியை நிறைவேற்றப் போகிறோம்."– என்றார்.



# மழை வெள்ளத்தில் மூழ்கியது பார்சிலோனா விமான நிலையம்

ஸ்பெயினின் பார்சிலோனாவில் உள்ள எல் பிராட் சர்வதேச விமான நிலையம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக 70 விமானங்களை இரத்து செய்யவும், மேலும் 50 விமானங்களை நாட்டின் பிற நகரங்களில் உள்ள விமான நிலையங்களில் தரையிறக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் பெய்த கன மழையினால் பார்சிலோனாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஸ்பெயினில், வலென்சியா மாகாணத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து, தற்போது பார்சிலோனா நகரம் கன மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.





பக்கங்கள் 02

கனடா முரசு

வியாழக்கிழமை 07/11/2024

## கனடாவில் தட்டம்மை நோய் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

கனடாவின் நியூ பிரவுன்ஸ்வீக் பிராந்தியத்தில் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களில் தட்டம்மை நோயாளர் 02▸



# தேர்தலில் வெற்றிபெற்ற ட்ரம்பிற்கு வாழ்த்து கூறினார் கனடிய பிரதமர்!

**அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

**நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் அமோக வெற்றியை பதிவு செய்துள்ளார்.**

**கனடிய அரசாங்கத்தின் சார்பில், அமெரிக்க ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜே.டி. வென்ஸ் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்துக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

அண்டை மற்றும் நட்பு நாடு என்ற வகையிலும், பொதுவான பெறுமதிகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்ற வகையிலும் அமெரிக்காவுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ட்ராம்பின் வெற்றி கனடாவின் பாதக விளைவினை ஏற்படுத்தும்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியை வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வெற்றியுள்ள நிலையில் அந்த வெற்றி கனடாவின் பொருளாதாரத்திற்கு பாதக விளைவினை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் கார்ல்டன் பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் இயன் லீ இந்த வெற்றி குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். ட்ரம்பின் வெற்றி தென் எல்லை பகுதியில் கனடாவிற்கு பல்வேறு சவால்களை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக எல்லை தாண்டிய வர்த்தக நடவடிக்கைகளில் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.





கனடாவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் மீது 10 முதல் 20 வீத வரி விதிக்கப்படலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ட்ராம்பின் பொருளாதார கொள்கைகள் பொதுவாக கனடாவை பாதிக்கும் வகையில் அமையும் என அவர் எதிர்வுகூறியுள்ளார்.







# ஒன்றாரியோவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

ஒன்றாரியோவின் வாசாகா கரையோரப் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

டுன்கோர்ன் அவன்யூ பகுதியில் தீ விபத்து குறித்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பற்றிய விபரங்கள் எதனையும் ஒன்றாரியோ பொலிஸார் வெளியிடவில்லை.

இந்த தீவிபத்து சம்பவம் சந்தேகத்திற்கு இடமானதாக தென்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# கனேடிய பாதுகாப்பு படையினருக்கு இலவச போக்குவரத்துச் சேவை

கனேடிய ஆயுதப் படையின் முன்னாள் வீரர்கள் மற்றும் தற்போதைய படையினருக்கு விரைவில் GO ட்ரான்சிட் போக்குவரத்து சேவையில் இலவசமாக பயணம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


ஒன்ராறியோவின் சிறுவர்கள், சமூகம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் மைக்கேல் பர்சா இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் ஒன்றாரியோ மாகாணத்தில், படையினருக்கான போக்குவரத்து நிவாரணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

எதிர்காலத்தில் UP எக்ஸ்பிரஸ் வரை இலவச சேவையை நீட்டிக்கும் திட்டமும் இருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவு தொகையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கனடா மற்றும் ஒன்டாரியோவை இன்றைய நிலையில் மாற்றுவதற்கு படைவீரர்கள் மகத்தான தியாகங்களைச் செய்துள்ளதாகவும் அவர்களின் நல்வாழ்வுக்கான அரசாங்கத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்றும் அமைச்சர் பார்சா தெரிவித்துள்ளார்.





## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்ரிக்ஷன், அப்பர் செயின் ஜோன் ரிவர் வெலி ஆகிய பகுதிகளில் இவ்வாறு தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நியூ பிரவுன்ஸ்விக் பொதுச் சுகாதார அலுவலகம் இந்த தகவல்களை உறுதி செய்துள்ளது.

நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் நோயாளர் எண்ணிக்கை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொது சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

தட்டம்மை நோய் மிக வேகமாக ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்கு மற்றொருவருக்கு பரவக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசிகளை உரிய முறையில் ஏற்றிக் கொள்வதன் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதற்கு முன்பதிவு செய்து கொண்டு தடுப்பூசிகளை முடிந்த அளவு ஏற்றுக் கொள்ளுமாறு பொதுச் சுகாதார அலுவலகம் பிரதேச வாழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

காய்ச்சல், இருமல், சளி உள்ளிட்ட சில நோய் அறிகுறிகள் இருந்தால் அது குறித்து அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.